

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (28.09.2024) முகாம் அலுவலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், துணை முதலமைச்சராக அறிவிக்கப்பட்டுள்ளதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், மக்களவைக் கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.9.2024) காஞ்சிபுரத்தில், பேரறிஞர் அண்ணா நினைவு இல்லத்தில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைசெல்வி மோகன் உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.9.2024) காஞ்சிபுரத்தில், பேரறிஞர் அண்ணா நினைவு இல்லத்தில், அங்கு வைக்கப்பட்டுள்ள பார்வையாளர் குறிப்பேட்டில் “மாநில உரிமைகளை பெற அண்ணா வழியில், கலைஞர் வழியில் அயராது உழைப்போம்! நன்றி, வணக்கம்!” என்று எழுதி கையொப்பமிட்டார். உடன் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைசெல்வி மோகன் உள்ளார்.

### குஜராத் வெள்ளத்தில் சிக்கித் தவித்த தமிழ்நாட்டைச் சேர்ந்த

# 26 நபர்களை தாயகம் அழைத்து வர முதல்வர் உத்தரவு!

## அயலகத் தமிழர் நலத்துறை சார்பில் துரித நடவடிக்கை!

சென்னை, செப்.30-

அயலகத் தமிழர் நலத் துறை செய்தி வெளியீடு வருமாறு:-

தமிழ்நாட்டைச் சேர்ந்த 26 நபர்கள், குஜராத்தின் பாவ்நகருக்கு புனித யாத்திரை சென்று திரும்பும் போது 26.09.2024 அன்று, மலேஷீ ஆற்றில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் அவர்கள் சென்ற பேருந்து சிக்கியது.

இச்செய்தி அறிந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு 26 தமிழர்களையும் தமிழகம் அழைத்து வர அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி அயலகத் தமிழர் நலத்துறை அதிகாரிகள் குஜராத் மாநில நிருவாகத்துடன் ஒருங்கிணைந்து பாதிக்கப்பட்ட தமிழர்களை மீட்க நடவடிக்கை எடுத்தனர்.

அதன் விளைவாக 26 தமிழர்களையும், குஜராத் மாநில நிருவாகம் மற்றும் தேசிய பேரிடர் மீட்புப் படையினர் பாதுகாப்பாக மீட்டு, அவர்களுக்குத் தேவையான மருத்துவ உதவி, தங்குமிடம், உணவு ஏற்பாடு செய்யப்பட்டு பாவ்நகரில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட 26 தமிழர்களும் இரயில் மூலம் சென்னை, சென்ட்ரல் இரயில் நிலையத்திற்கு 01.10.2024 அன்று காலை வந்தடைகின்றனர். சென்னை வந்தடையும் 26 தமிழர்களுக்கும் அயலகத் தமிழர் நலத்துறை சார்பில் வாகன வசதி ஏற்பாடு செய்யப்பட்டு அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

இவ்வாறு அயலகத் தமிழர் நலத்துறை தெரிவித்துள்ளது.

### புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தான 6 மாதத்திற்குள்

# 9,000 கோடி ரூபாயில் டாடா வாகன உற்பத்தி ஆலை! 5,000 பேருக்கு வேலைவாய்ப்பு!

## இராணிப்பேட்டையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

**சென்னை, செப். 30 -**

**புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத் திடப்பட்ட ஆறு மாதத்திற்குள் ரூ.9,000 கோடி முதலீடு மற்றும் 5,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் இராணிப்பேட்டை மாவட்டம், சிப்காட் பனப்பாக்கம் தொழிற்பூங்காவில் டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தின் வாகன உற்பத்தி ஆலை அமைப்பதற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.09.2024) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் இராணிப்பேட்டை மாவட்டம், சிப்காட் பனப்பாக்கம் தொழிற் பூங்காவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 9,000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 5,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தின் வாகன உற்பத்தி ஆலை அமைப் பதற்கு அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கை யிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், 2030க்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு மாற்றம் பெறுவதற்கும் தேவையான முதலீடுகளை ஈர்ப்பதற்கு தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக முதலமைச்சர் அவர்கள் அண்மையில் அமெரிக்க நாட்டிற்கு அரசு முறை பயணம் மேற்கொண்டு 19 நிறுவனங்களு டன் ரூ.7616 கோடி முதலீட்டி ற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது.

மேலும், அனைவரையும் உள்ளடக்கிய பரவலான வளர்ச்சி என்ற தமிழ்நாடு அரசின் கொள்கைக்கேற்ப, ஈர்க்கப்படும் தொழில் திட்டங்கள் மாநிலம் முழுவதும் பரவலாக அமைக்கப்பட்டு, இலட்சக்கணக்கான வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில், எஃகு, தகவல் தொழில் நுட்பம், மோட்டார் வாகன உற்பத்தி போன்ற பல்வேறு துறைகளில் உலகளவில் சிறப்புடன் செயல்பட்டு வரும் டாடா குழுமத்தின் ஒரு அங்கமான டாடா மோட்டார்ஸ் நிறுவனம் தனது புதிய அதிநவீன மோட்டார் வாகன உற்பத்தி ஆலையை இராணிப்பேட்டை மாவட்டம், சிப்காட் பனப்பாக்கம் தொழிற்பூங்காவில் 9,000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 5,000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் அமைக்க முன்வந்துள்ளது.

**அரசின் நடவடிக்கைக்கு சிறந்த எடுத்துக்காட்டு!**

இத்திட்டத்தில், 100 சதவிகிதம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியைப் பயன்படுத்தி, டாடா மோட்டார்ஸ் மற்றும் ஜாகுவார் லேண்ட் ரோவர் (JLR) சொகுசு வாகனங்கள் உற்பத்தி செய்யப்படவுள்ளன. இவ்வாண்டு மார்ச் மாதம் இத்திட்டத்திற்கான புரிந்து ணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுதிடப்பட்ட ஆறு மாதத்திற்குள், இத்திட்டத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்றைய தினம் அடிக்கல் நாட்டப்பட்டது குறிப்பிடத் தக்கது. இது புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு துரிதமாக மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

**தமிழ்நாட்டில் தடம் பதித்துள்ள டாடா நிறுவனங்கள்!**

டாடா குழுமத்தின் துணை நிறுவனங்களான டிசிஎஸ், டைடன், டாடா பவர், டாடா எலெக்ட்ரானிக்ஸ் தாஜ் ஹோட்டல்கள் ஆகியவை ஏற்கெனவே தமிழ்நாட்டில் தடம் பதித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.09.2024) இராணிப்பேட்டை மாவட்டம், சிப்காட் பனப்பாக்கம் தொழிற்பூங்காவில் டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தின் வாகன உற்பத்தி ஆலை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழாவில், அத்தொழிற்சாலையின் மாதிரி வடிவமைப்பினை பார்வையிட்டார். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, டாடா சன்ஸ் நிறுவனத்தின் தலைவர் என்.சந்திரசேகரன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அரசு செயலாளர் வி.அருண் ராய் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.எம். முனிரத்தி னம், ஜெ.எல். ஈஸ்வரப்பன் மற்றும் பி. கார்த்திகேயன், டாடா சன்ஸ் நிறுவனத்தின் தலைவர் என். சந்திரசேகரன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அரசு செயலாளர் வி.அருண் ராய். சிப்காட் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கி.செந்தில்ராஜ், வழிகாட்டி நிறுனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு, இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா, டாடா மோட்டார்ஸ் குழுமத்தின் தலைமை நிதி அலுவலர் P.B.பாலாஜி, டாடா மோட்டார்ஸ் நிறு வனத்தின் மேலாண்மை இயக்குநர் சைலேஷ் சந்திரா, JLR நிறுவனத்தின் இயக்குநர் ஃப்ராங்க் லட்விக் (Thiru Frank Ludwig) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை நகராட்சி மத்திய பேருந்து நிலையத்தில் நகராட்சி பொதுநிதி மற்றும் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.55.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள தலைவர்கள் நினைவு பூங்கா, ஜல்லிக்கட்டு நினைவு சதுக்கம், நீரூற்று பூங்கா சந்திப்பு, அசோகா ஸ்தூபியை வருவாய் கோட்டாட்சியர் ஜஸ்வந்த் கண்ணன் தலைமையில் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், நகர்மன்றத் தலைவர் எம்.மத்தின் முன்னிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார். இதில் கே.ஈஸ்வரசாமி, செ.வேலுச்சாமி, மகாலட்சுமி முருகன், சு.கலைராஜன் உள்பட நகர்மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர, வார்டு கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட எலவடி,மேல் நாரியப்பனூரில் ரூபாய் 46 லட்சத்தில் ஊராட்சி அலுவலகம், சாலை அமைக்கும் பணியினை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர்,ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் வழிகாட்டுதலின்படி ஒன்றியக் குழு பெருந்தலைவர், ஒன்றியக் கழகச் செயலாளர் சத்தியமூர்த்தி தலைமை தாங்கி செய்து பணிகளை துவக்கி வைத்தார். இதில் வட்டார வளர்ச்சி அலுவலர், ஒன்றிய பொறியாளர், ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள் மேற்பார்வையாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உடன் கலந்து கொண்டனர்.